Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 90/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW7** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேஸ்வரி |
| Father/Husband Name | : | ராஜா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2024

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். நான் திருப்பூரில் B.A. 2ம் ஆண்டு படித்து வருகிறேன். இறந்த ராஜா என் அப்பா ஆவார். அ.சா.6 காளீஸ்வரன் எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். 19.08.2019ல் சிறுவயலில் நான் 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது என் அப்பாவை சரவணன் என்பவர் கத்தியால் குத்திவிட்டதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. உடனே நான், என் அம்மாச்சி ஆகியோர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது

அப்பாவிற்கு மருத்துவர்கள் சிசிச்சை அளித்துக் கொண்டிருந்தார்கள். என் அப்பாவிற்கு தீவிரகாயம் ஏற்பட்டு இருந்ததால் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு என் அப்பா 4 நாட்கள் சிகிச்சை பெற்று சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். நான் அப்பத்தா மீனாட்சியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அப்போது 3 மாதங்களுக்கு முன்பு சரவணன் என்பருக்கும் என் அப்பாவிற்கும் சம்பள பிரச்சனை காரணமாக சண்டை நடந்தது என்றும் கூறினார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

சிறுவயல் கிராமம் இராமநாதபுரத்திலிருந்து சுமார் 18 முதல் 20 கிமீ தூரம் உள்ளது. அங்கு நகரப் பேருந்தில் தான் செல்ல முடியும் தொலைதூரப் பேருந்தில் செல்ல முடியாது. இராமநாதபுரத்திலிருந்து சிறுவயல் கிராமத்திற்கு ஒரு நாளுக்கு 4 முறை தான் உள்ளது. காலை 08.00 மணி, மதியம் 11.00, 01.30 மணிக்கும், மாலை 04.00 மணிக்கும் உள்ளது. சுமார் 1 ½ மணிநேரம் இராமநாதபுரம் வர ஆகும் என்றால் சுமார் முக்கால் மணிநேரத்தில் சிறுவயல் கிராமத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு வந்து விடலாம் என்று சாட்சியம் அளிக்கிறார். சம்பவத்தின் போது நான் 10 ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது பள்ளிக்கூடம் இருந்தது. நான் பள்ளிக்கு சென்றிருந்தேன். எனக்கு தகவல் கிடைக்கும் போது மதியம் 12.15. 12.30 மணி இருக்கும். நாங்கள் பேருந்தில் வரவில்லை. பிரபு என்ற நபரின் வாகனத்தில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அப்போது மதியம் 01.15 மணி இருக்கும். அப்போது மருத்துவமனையில் என் அண்ணன், அப்பத்தா, அத்தை ஆகியோர்கள் மட்டும் இருந்தனர். வேறு யாரும் இல்லை. நான் சிறுவயலிலும், என் அண்ணன் இராமநாதபுரத்திலும் இருந்து வந்தோம். என் அப்பா திருப்பூரில் தனியாக இருந்து வேலை பார்த்து வந்தார். 3 மாதங்கள் மட்டும் அங்கு வேலை பார்த்தார். என்ன வேலை பார்த்தார் என்று தெரியாது. எங்கள் ஊரில் என் அப்பா யாரிடம் பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் 6 ம் வகுப்பு முதல் சிறுவயலில் தான் படித்து வந்தேன். என் தற்கொலை செய்து கொண்டதால் என் பாட்டிகளுக்கு என் அப்பா மீது வருந்ததம் இருந்தது. அதனால் என் அப்பத்தா என் அப்பாவிடம் பேசமாட்டார். என் தனிப்பட்ட முறையில் தான் அவரது விருப்பத்திற்கு இருந்து வந்தார். என் அப்பா மது குடிக்கும்

பழக்கம் உள்ளவர் அல்ல. என் அப்பா மது அருந்தும் பழக்கம் இல்லை என்றும் கெட்ட நடத்தையின் காரணமாகவும், அவருக்கு பல இடங்களில் பிரச்சனைகள் இருந்தது என்றால் சரியல்ல. அதனால் தான் என் அப்பா எங்கோ குத்துபட்டு கிடந்தவரை 108 ஆம்புலன்ஸில் அங்கு இருந்தவர்கள் அழைத்துச் சென்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. நானும் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும் எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் என் அப்பா இறந்த விவரம் அறிந்து பின்னிட்டு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கும் சரவணன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் சொன்னது போல என் அப்பாவிற்கும் சரவணம் என்பவருக்கும் தகராறு நடந்ததாக நான் கூறியுள்ள விவரம் பொய் என்றும் பின்னிட்டு சொல்லிக் கொடுத்தன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 90/2020** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW**6 |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | காளீஸ்வரன் |
| Father/Husband Name | : | ராஜா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2024

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். நான் கேமரா ஆப்ரேட்டராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜா என் அப்பா ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். என் அப்பா இறப்பதற்கு முன்பு இராமநாதபுரத்தில் கொத்தனார் வேலை பார்த்து வந்தார். எனது அப்பாவுடன் ஆஜர் எதிரி வேலை பார்த்து வந்ததில் கேணிக்கரை அருகில் சம்பளம் கொடுப்பதில் என் அப்பாவுக்கும், ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு என் அப்பா அன்று இரவே திருப்பூருக்கு

வேலைக்கு சென்று விட்டார். அதன் பின்பு 3 மாதங்கள் கழித்து 19.08.2019 ம் வருடம் திருப்பூரிலிருந்து அதிகாலை 05.00 மணிக்கு இராமநாதபுரத்தில் உள்ள புளிக்காரத் தெருவில் உள்ள அவரது வீட்டிற்கு வந்தார். எப்பவும் போல காலையில் 07.00 மணிக்கு வேலை எதுவும் கிடைக்கிறதா என பார்ப்பதற்கு ஜெகன் தியேட்டர் அருகே சென்றிருந்தார். காலை 10.00 மணிக்கு ரவீந்திரன் என்பவர் செல்போன் மூலம் எங்களுக்கு அப்பாவை குத்திவிட்டார்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக சொன்னார். நான் உடனே என் அத்தை உமாராணிக்கு போன் மூலம் தகவல் சொல்லி நான், என் அத்தை உமாராணி, அப்பத்தா மீனாட்சி ஆகியோர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அப்போது என் அப்பா உடல் முழுவதும் இரத்தம் இருந்த நிலையில் பேச முடியாத நிலையில் இருந்தார். உடனே அருகில் இருந்த ரவீந்திரனிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். அப்போது எனது அப்பா ராஜாவை ஆஜர் எதிரி சரவணன் கத்தியால் குத்தியதாக சொன்னார். பின்பு கேணிக்கரையில் இருந்து போலிசார் வந்து எனது அப்பத்தா மீனாட்சியிடம் புகார் வாக்குமூலம் மற்றும் கைரேகை வாங்கினார்கள். அதன் பிறகு எனது அப்பாவை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து காயம் தீவிரமாக இருப்பதால் மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அழைத்துச் சென்றோம். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்த என் அப்பா காலமாகிவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவ சமயத்தில் நான் 11ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். பள்ளிக்கு காலை 08.45 மணிக்கு புறப்பட்டு சென்றுவிட்டு மாலை 04.30 மணிக்கு வீட்டிற்கு வந்துவிடுவேன். சம்பவ நாள் அன்று எனக்கு பள்ளிக்கூடம் இருந்தது. எனக்கும் என் அம்மாவிற்கும் செல்போன் இல்லை. என் அப்பத்தாவிடம் செல்போன் இருந்தது. அந்த செல்போன் நம்பர் எனக்கு தெரியாது. எனக்கு சம்பவம் குறித்து கேள்விப்பட்டதெல்லாம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து தான். எனக்கு நேரடியாக சம்பவம் குறித்து தெரியாது. என் அப்பாவை மதுரை அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு, எந்த வாகனத்தில் அழைத்துச் சென்றனர் என்றால் காலை 11.00 மணி அளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸில் கொண்டு சென்றனர். அப்போது நான், என் அப்பத்தா மற்றும் என்

அத்தை ஆகியோர்கள் மதுரைக்கு அழைத்து சென்றோம். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து தான் போலிசார் என்னை விசாரித்தனர். நான், என் அப்பத்தா மற்றும் என் அத்தை ஆகியோர்கள் ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது போலிசார் அங்கு இருந்தனரா என்றால் இருந்தனர். அங்கு என்ன நடந்தது என்று என் அப்பத்தாவிடம் விசாரித்தனர். அப்போது மருத்துவமனையில் மருத்துவர் என் அப்பாவை பார்த்துக் கொண்டிருந்தாரா என்பது தெரியாது. நான் வெளியில் இருந்தேன். அப்போது மருத்துவமனையில் உள்ளே என் தந்தையாரை வைத்து போலிசார் என் அப்பத்தாவிடம் விசாரித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் அங்கு வேறு யாரும் உள்ளே இல்லை. என் அப்பா திருப்பூரில் எங்கு இருந்தார், என்ன வேலை பார்த்தார் என்றும் எனக்கு தெரியாது. நான் திருப்பூருக்கு சென்றதில்லை. என் அம்மா தற்கொலை செய்து கொண்டார். அதற்கு காரணம் என் அப்பா என்றால் சரியல்ல. என் அப்பா மது அருந்திவிட்டு கெட்ட நடத்தையில் சண்டை போட்டு வேலைக்கு செல்லாமல் இருந்ததால் என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையில் சண்டை என்றால் சரியல்ல. என்ன காரணத்தினால் அவர்களுக்குள் சண்டை என்று எனக்கு தெரியாது. என் அப்பா மது அருந்திவிட்டு கெட்ட நடத்தையில் சண்டை போட்டு வேலைக்கு செல்லாமல் இருந்ததால் என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையில் சண்டை ஏற்படும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என் அப்பா கொத்தனார் வேலை பார்த்தார் என்ற விவரம் என்ற தெரியும். யார் யாரிடம் வேலை பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் என் அப்பத்தா என் அப்பாவிற்கு எப்படி காயம் ஏற்பட்டது, எங்கு வைத்து காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை மருத்துவர் விசாரித்தார் என்றால் சரிதான். அந்த விவரத்தை மருத்துவர் எழுதிக் கொண்டாரா என்று எனக்கு தெரியாது. நான் உடனே என் அத்தை உமாராணிக்கு போன் மூலம் தகவல் சொல்லி நான், என் அத்தை உமாராணி, அப்பத்தா மீனாட்சி ஆகியோர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். போலிசார் என்னை விசாரித்தபோது மருத்துவமனையில் என் அப்பா உடல் முழுவதும் இரத்தம் இருந்த நிலையில் பேச முடியாத நிலையில் இருந்தார். உடனே அருகில் இருந்த ரவீந்திரனிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். அப்போது எனது அப்பா ராஜாவை ஆஜர் எதிரி சரவணன் கத்தியால் குத்தியதாக சொன்னார். பின்பு கேணிக்கரையில் இருந்து போலிசார் வந்து எனது அப்பத்தா

மீனாட்சியிடம் புகார் வாக்குமூலம் மற்றும் கைரேகை வாங்கினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இல்லை என்றாலும் எங்களுக்கு யாரும் தகவல் சொல்லவில்லை என்றாலும் அதற்கு பின் நாங்கள் இராமநாதபுரம் அரச மருத்துவமனைக்கு சென்றோம் என்பதும் அங்கு வைத்து ரவீந்திரனிடம் என்ன நடந்தது என்று நாங்கள் கேட்டோம் என்பதும், அதற்கு அவர் சம்பவம் குறித்து எங்களிடம் சொன்னார் என்பது பொய் என்றாலும் அது சம்மந்தமாக என் அப்பத்தா புகார் கொடுத்தார் என்பதும் சரியல்ல. எனக்கு இந்த சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும் நான் ஊரிலியே அன்று இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் குடும்பத்தை விட்டு என் தந்தை இருந்து வந்தார் என்றும் அவர் மனம் போன போக்கில் வாழ்ந்து வந்தார் என்றும் அவர் மது அருந்திவிட்டு தகாத செயல்கள் செய்து வந்ததாகவும், தகராறு செய்வது வழக்கமாக வைத்திருந்தார் என்றும் அதில் எங்கோ ஏற்பட்ட தகராரில் என் தந்தைக்கு காயம் ஏற்பட்டு பின்னிட்டு இறந்தார் என்றும் பின்னர் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.